# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 159/3 — 1975 අප්‍රේල් 16 වැනි බදාදා — 1975.04.16

159/3 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1975 இன் இல. 187/1*

*வி. கா. அமை. எண். ஜே. 258 (பிஆர்)* *ச.அ. எண் : எல். 91*

*1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணிக் கொள்வனவு (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட (460 ஆம் அத்தியாயமான) காணிக் கொள்வனவுச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (1), (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், விவசாய, காணி அமைச்சரின் ஆலோசனைப்படி, சனாதிபதி அவர்கள், திருவாளர் எல். பீ. த. சில்வா அவர்களை 1975 ஏப்பிறல் முதலாம் திகதியிலிருந்து மூன்று வருட காலம் வரை சட்ட அங்கத்தவராக ஆங்கு விதிக்கப்பட்ட முறையின்படி மேன்முறையீடுகளைக் கேட்டற்காக மீட்டாய்வுச் சபைக்கு மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மேலும், முற்கூறிய அதிகாரச் சட்டத்தின் 19 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தமனர் அவர்கள் 1975 ஏப்பிறல் முதலாம் திகதியிலிருந்து திருவாளர் எல். பி. த. சில்வா அவர்களை அச்சபையின் தலைவராகவும் நியமித்துள்ளார்.*

*அதி உத்தமனரின் ஆணைப்படி,*

*டீ. எஸ். ஜே. த மெல்,*
*சனாதிபதியின் செயலாளருக்காக.*

*சனாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு,*
*1975, ஏப்பிறல் 15.*

*4-498*

---

## விலைக் கட்டளைகள்

*விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்*

*இரத்துச் செய்யும் கட்டளை*

*விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அதிகாரம்) 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத் திறமைய விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானாவிதப் பொருட்களும்) வில்பிறிட் ஜயசூரிய ஆகிய நான் 1974 ம் ஆண்டு நவம்பர் 12 ம் திகதிய 137/7 ம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியான 1974 ம் ஆண்டு 3 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை (இறக்குமதி செய்யப்பட்ட துணிவகைகள்) யை உடனடியாக ரத்துச் செய்கிறேன்.*

*வில்பிறிட் ஜயசூரிய,*
*விலைக்கட்டுப்பாட்டதிகாரி,*
*(உணவும் நானாவிதப் பொருட்களும்).*

*கொழும்பு,*
*1975 ம் ஆண்டு ஏப்ரல் மார்தம் 11 ந் திகதி.*
*4-473/1*

---

*வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கற் சட்டம்*

*1974 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் திகதிய 137/7 ம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியான பிரதேசக் கூட்டுறவுக் கடைகளில் துணிகள் விற்பனை தொடர்பான கட்டளையை, எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானாவிதப் பொருட்களும்) யும் இலங்கை முழுவதற்கும் அனுமதி வழங்கும் அதிகாரியுமாகிய வில்பிறிட் ஜயசூரிய ஆகிய நான் உடனடியாக ரத்துச் செய்கிறேன்.*

*வில்பிறிட் ஜயசூரிய,*
*விலைக்கட்டுப்பாட்டதிகாரி,*
*(உணவும் நானாவிதப் பொருட்களும்).*

*கொழும்பு,*
*1975 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ந் திகதி.*
*4-473/2*

---


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.